# திருமலையில் தமிழரசுக் கட்சியின் மாநாடு நடத்த இடைக்காலத் தடை!

## மாவட்ட நீதிமன்றம் அதிரடி உத்தரவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற இருந்த நிலையில் இரண்டு வாரங்களுக்கு இம்மாநாட்டை நடத்த வேண்டாம் என்று இடைக்காலத் தடை விதித்து திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிர்வரும் 14 நாட்களுக்கு செயற்படும் வகையில் மேற்குறித்த இடைக்காலக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கின் மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவக்குமாருடன் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் மற்றும் சட்டத்தரணி புரந்தன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

கடந்த ஜனவரி மாதம் 21 மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானவையும், செல்லுபடியற்றவை எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது.

எனவே, குறித்த இரண்டு பொதுச் சபைக் கூட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் சட்டத்துக்கு முரணானவையும் செல்லுபடியற்றனவாகும் எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது.

2 ▶



# மாலைக்கதிர்

Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 03 வியாழக்கிழமை 15.02.2024 கதிர் 182




## தமிழரசின் தேசிய மாநாட்டுக்கு யாழ் நீதிமன்றும் தடைவித்தது!

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் இன்று மதியம் தடையுத்தரவு விதித்துள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தாக்கல் செய்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது.

இதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றமும் இன்று இடைக்கால தடைவிதித்துள்ளது.

## தற்கொலை செய்துகொண்ட ஜனாதிபதியாக இலங்கை வரலாற்றில் இடம்பிடிப்பார் அநுர

### திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி. கூறுகின்றார்

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெறும் பட்சத்தில் நாட்டை ஆள முடியாமல் தற்கொலை செய்துகொண்ட ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜே.வி.பி. இரட்டை நிலைப்பாட்டைப் பின்பற்றி வருகின்றது என்பது தற்போது உறுதியாகின்றது. அக்கட்சியினரால் போலிக் கருத்துக்களே சமூகத்தில் விதைக்கப்படுகின்றன. எனவே, உண்மையைச் சொல்லி நாட்டைப் பொறுப்பேற்குமாறும், பொய்களை நிறுத்துமாறும் நாம் கோருகின்றோம்.

இலங்கை வரலாற்றில் மன்னர்களுக்குப் பிறகு, அழுத்தம் காரணமாக நாட்டை ஆள முடியாமல் ஓடிய தலைவர்தான் கோட்டாபய ராஜபக்ஷ. அநுரகுமார



திஸாநாயக்க ஜனாதிபதி ஆகமாட்டார் என்பது உறுதி. சிலவேளை கனவிலாவது அவர் ஜனாதிபதியானால் அழுத்தம் தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்ட ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார். ஏனெனில் அவர் அந்தளவுக்குப் பொய்யுரைக்கின்றார்.

அத்துடன், இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு ஜே.வி.பியின் கொள்கைகளை அநுரகுமார திஸாநாயக்க காட்டிக்கொடுத்துள்ளார்." - என்றார். (அ)

## யாழ். பொலிஸ் நிலைய பரிசோதனை நிகழ்வு



யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வும் பொலிஸ் அணிவகுப்பு நிகழ்வும் இன்று காலை இடம்பெற்றது.

பரிசோதனை நிகழ்வில் யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிசாந்த பரிசோதனைகளை முன்னெடுத்தார்.

அணிவகுப்பு நிகழ்வில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடைமையாற்றும் பொலிஸாரின் சீருடைகள், ஆயுதங்கள், வாகனங்கள், பரிசோதிக்கப்பட்டதோடு பொலிஸாருக்கான விசேட அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜருள், யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (அ)

## தேர்தல்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு மௌனம் அரசாங்கத்திடம் மண்டியிட வேண்டிய அவசியமில்லை!

### நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும

நமது நாட்டின் தேர்தல் ஆணைக்குழு தேர்தல்கள் தொடர்பில் மௌனம் காக்கின்றது. தேர்தல்கள் பற்றி அரசாங்கம் அறிக்கைகளை வெளியிடுகிறது. தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தின் முன் மண்டியிட வேண்டிய அவசியமில்லை, உரிய திகதியில் தேர்தல்களை நடத்த வேண்டியதே நியதியாகும், என சுதந்திர மக்கள் பேரவையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நேற்று (14 ஆம் திகதி ) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 2 ▶



## தடையுத்தரவுக்கு எதிராக நாளை மனுத்தாக்கல்?

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த இரு வாரங்களுக்கு இடைக்காலத் தடை விதித்து திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இட்ட உத்தரவுக்கு எதிராக தமிழரசுக் கட்சியினால் நாளை மனுத்தாக்கல் செய்யப்படும் என்று கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளுக்கு முட்டுக் கட்டை போட முயலும் நடவடிக்கைகளின் பின்னணியில் பெரும் வலைப் பின்னல் ஒன்று செயற்படுவதாகவும் அச்செய்தி குறிப்பிடுகிறது.

## 2023 வருடத்தில் முகநூல் தொடர்பில் 31,548 புகார்கள்! தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக்க தெரிவிப்பு

2023 வருடத்தில் முகநூல் (பேஸ்புக்) தொடர்பில் முப்பத்தோராயிரத்து ஐநூற்று நாற்பத்தி எட்டு (31,548) புகார்கள் பெறப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர பதில் மன்றத்தின் மூத்த தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக்க தமுனுபொல தெரிவித்துள்ளார்.

முகநூல் ஊடாக பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இதன்படி, பத்தாயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு (10,774) முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறே, 2023 ஆம் ஆண்டில் போலி முகநூல் கணக்குகள் தொடர்பில் 5,188 புகார்களும், அனுமதியின்றி பேஸ்புக் கணக்குகளில் ஊடுறுவல் (ஹக்கிங் ) தொடர்பில் 7499 2 ▶

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# காதலர் தினத்தில் காதலன் தற்கொலை

இறக்குவானை பிரதேசத்தில் காதல் துயரத்தால் இளைஞர் ஒருவர் காதலர்தினத்தில் உயிரை மாய்த்துக் கொண்டுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இறக்குவானையைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் தாயார் வெளிநாட்டில் பணிபுரிபவர் எனவும், அவரது தந்தை கொழும்பில் பணிபுரிந்து வருகின்றார் எனவும், மேலும் இரு சகோதரிகளுடன் மேற்படி இளைஞர் வீட்டில் வசித்து வந்தார் எனவும் தெரியவந்துள்ளது.

“எனது சகோதரர், யுவதி ஒருவருடன் காதல் தொடர்பில் இருந்து வந்த நிலையில், சம்பவத்துக்கு முன்தினம் இரவு தனது காதலியுடன் தொலைபேசியில் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். அந்த அழைப்பின் பின்னர் சகோதரர் சத்தமாக அழுதார். நாளை (14) காதலர் தினத்தைக் கொண்டாட இறக்குவானைக்கு வருமாறு தனது காதலியை எனது சகோதரர் பல முறை அழைப்பதைக் கேட்டேன்.” - என்று இறந்தவரின் சகோதரி ஒருவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இறப்பதற்கு முன் மேற்படி இளைஞர் தனது கையைப் பிளேடால் வெட்டிக் கொண்டுள்ளார் என்றும் மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

இந்த மரணம் தற்கொலை எனத் தெரிவித்த மரண விசாரணை அதிகாரி சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக கஹவத்தை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார். (அ)

# கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள்!



கிளிநொச்சி மாவட்ட மாசி மாதத்திற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று(15) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

இன்றைய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மாவட்டத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதன்போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டங்களின் அபிவிருத்தி திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. (02)

# ஜனாதிபதி நிதியத்தின் புதிய இணையத்தளம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம்

ஜனாதிபதி நிதியத்தின் புதிய இணையத்தளம் (https:www.presidentsfund.gov.lk) ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் (13ஆம் திகதி) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களை மூன்று மொழிகளிலும் பெறமுடிவதுடன் மருத்துவ நிவாரணங்களை பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்குவதற்கான வசதியும் இதில் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிகழ்வில், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளரும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளருமான சரத் குமார, ஜனாதிபதி நிதியத்தின் பிரதிப் பணிப்பாளர் கயான் மொரலியகே, ஜனாதிபதி நிதியத்தின் உதவிப் பணிப்பாளர் எம். பொத்தேஜு உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ரெப-36)

# 15 பயணிகள் மரணிப்பதற்கு காரணமான சாரதி கைது!

வெலிகந்த செவனப்பிட்டிய புகையிரத வேலியை உடைத்தவாறு பேருந்தொன்றை செலுத்தி புகையிரதத்தில் மோதியதன் மூலம் 15 பயணிகள் மரணமடைவதற்கும், 40 பேர் கடுமையான காயங்களுக்கு உள்ளாவதற்கும் காரணமாயிருந்த குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு பிடியாணை விடுக்கப்பட்டிருந்த குறித்த பேருந்தின் சாரதி நேற்று (14) காலை வெலிகந்த நகரில் கைது செய்யப்பட்டார்.

இந்த நபருக்கு செப்டம்பர் 22ஆம் திகதி பொலன்னறுவை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது. இந்நபர் நீதிமன்றில் முன்னிலையாகாததால் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையிலேயே வெலிகந்த பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேற்படி நபர் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடையவர் ஆவார். (ரெப-35)

# 25 இலங்கையர்களை நாடுகடத்தத் தீர்மானம்!

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள 25 இலங்கையர்கள் உட்பட 186 வெளிநாட்டவர்களை நாடு கடத்த மாலைதீவு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வீசா மீறல் மற்றும் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்களை நாடு கடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி 25 இலங்கையர்கள் 83 பங்களாதேஷ் பிரஜைகள், 46 இந்திய பிரஜைகள் மற்றும் 08 நேபாளி பிரஜைகள் இதில் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (04)

## 2023 வருடத்தில் முகநூல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகார்களும், இணைய மோசடி (வேலை தருவதாகக் கூறி பண மோசடி, பரிசுகள் கிடைத்துள்ளதாகவும் குறித்த பரிசுப் பொதியை பெறுவதற்கு பணம் கோரல் போன்ற மோசடிகள்) தொடர்பில் 1609 புகார்களும் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முகநூல் பற்றிய புகார்களில் அநேகமானவை கொழும்பு, குருநாகல், கம்பஹா மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்தே கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் பொறியியலாளர் சாருக்க தமுனுபொல மேலும் தெரிவித்துள்ளார். (ரெப-34)

## தேர்தல்கள் தொடர்பில் தேர்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பணம் தொடர்பில் ஜனாதிபதி பல்வேறு அறிக்கைகள் வெளியிடுவதாகவும், நிதி அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உள்ளது எனவும் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீட்டை நாடாளுமன்றமே மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் அமைச்சர்களும் ஜனாதிபதியும் பலவாறு வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்கின்றனர், இதற்கென பெருமளவு பணம் செலவிடப்படுகின்ற அதேவேளை, தேர்தலுக்கு மாத்திரம் பணமில்லை என்று இந்த அரசாங்கம் கூறி வருகின்றது எனவும் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார். (ரெப-33)

## திருமலையில் தமிழரசுக் கட்சியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் அமைப்பு விதி அனுமதிக்கின்ற தொகையை விட அதிகளவான உறுப்பினர்கள் பொதுச் சபைக் கூட்டங்களில் பங்குபற்றி, குறித்த தெரிவுகளின்போது வாக்களித்தமையால் குறித்த கூட்டம் சட்டமுரணானது எனவும் இதன்போது நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சமர்ப்பணங்களின் அடிப்படையில் எதிர்வரும் 19 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற இருந்த தேசிய மாநாட்டுக்குத் திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இரண்டு வாரங்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ளது.

இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி திறந்த நீதிமன்றில் அழைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கை திருகோணமலை, சாம்பல்தீவு, கோணேஷபுரியைச் சேர்ந்த தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சந்திரசேகரம் பரா என்பவர் சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமார் ஊடாகத் தாக்கல் செய்துள்ளார்.

அத்துடன் இந்த வழக்கில் மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், சண்முகம் குகதாசன் உட்பட தமிழரசுக் கட்சியின் ஏழு முக்கியஸ்தர்கள் எதிர் மனுதாரர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# தென்கிழக்கு - களனி பல்கலைகளிடையே அறிவுசார் வளங்கள் பரிமாற்ற நிகழ்வு





(நூருல் ஹுதா உமர்)

பல்கலைக்கழக அறிவுசார் வளங்களை பரிமாறிக் கொள்ளும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் களனி பல்கலைக் கழக புவியியல் துறை மாணவர்களுக்கு ட்ரோன் கேமரா பயன்பாடு மற்றும் தொழிநுட்பம் தொடர்பான செயலமர்வு இன்று தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் புவியல்துறை திணைக்களத் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் கே.நிஜாமிர் தலைமையில் இடம்பெற்றது.

பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பஸில் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த செயலமைவை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின்போது களனி பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பீடத்தின் புவியியல் துறை தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் லால் மர்வின் தர்மசிறியும் பேராசிரியர் ஏ.ஜி. அமரசிங்க அவர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எல். பௌசுல் அமீர், கலாநிதி றபீகா அமீர்டீன் , சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச். முகம்மட் றினோஸ், விரிவுரையாளர் ஐ.எல். முகம்மட் சாஹிர், விரிவுரையாளர் ஏ.எல். ஐயூப், விரிவுரையாளர் எம்.என். நுஸ்கியா பானு, விரிவுரையாளர் எம். எச். பாத்திமா நுஸ்கியா உள்ளிட்டவர்களும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.ரீ. அஹமட் அஷ்ஹர், கல்வி சாரா உத்தியோகத்தர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

ட்ரோன் கேமரா பயன்பாடு மற்றும் தொழிநுட்பம் தொடர்பான செயலமர்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக புவியல்துறை திணைக்களத்தின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் உள்ளிட்ட விரிவுரையாளர்கள் களனி பல்கலைக்கழக புவியல்துறை மாணவர்களுக்கு விரிவான செயல்முறை பயிற்சிகளையும் விரிவுரைகளையும் ஆற்றினர்.

களனி பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் வருகையை மகிழ்விக்க தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுயதொழில் உபகரணங்கள்



(ஹஸ்பர் ஏ.எச்)

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம் படுத்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் சுயத்தொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டுதலின் பேரில் மாகாண சமூக சேவைகள் அமைச்சு நடத்திய மாற்றுத்திறனாளிகளை கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுய தொழில் உபகரணங்களும், பொழுதுபோக்குக்காக அவர்களின் வீடுகளுக்கு டுநுனு தொலைக்காட்சிகளும் செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் சாதனைகள் நிகழ்த்திய தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டது. இதில் மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காச நோய் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு



(சர்ஜுன் லாபீர்)

காச நோய் சம்மந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு உதவிப் பிரதேச செயலாளர் யு.எம்.அஸ்லம் தலைமையில் நேற்று (14) சம்மாந்துறை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலைய பொறுப்பதிகாரி டொக்டர் ஐ.எல். ஏ.கபீரினால் தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எல்.தாஸீம் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.

# அட்டாளைச்சேனை பிரதேச குடும்பங்களுக்கு உலருணவு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வருமானம் குறைந்த மற்றும் வாழ்வாதார ரீதியில் பாதிப்புற்ற பெண்கள் தலைமை தாங்கும், தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதி வழங்கும் நிகழ்வு செக்டோ ஸ்ரீலங்கா சமூக சேவை நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை (13) இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஏ.எல்.நியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி.அஸ்ரத், செக்டோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் உப தலைவர் எம்.எச்.றம்சான், பொருளாளர் ஏ.எல்.றிம்ஸான், அமைப்பாளர் ஏ.எல். றியாஸ், ஊடக இணைப்பாளர் ஏ.ஆர்.எம்.றிம்சான், உறுப்பினர் ஏ.எல்.எம். புஹாரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



# உக்ரைனுக்கு மேலும் 953 கோடி டொலர் உதவி அமெரிக்க நாடாளுமன்று ஒப்புதல் வழங்கியது



போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கு மேலும் 953 கோடி டொலர் நிதியுதவி அளிக்க அமெரிக்க நாடாளுமன்றம் செவ்வாய்க்கிழமை ஒப்புதல் வழங்கியது.

இது தொடர்பாக செனட் சபையில் கொண்டு வரப்பட்ட மசோதாவுக்கு ஆதரவாக 70 வாக்குகளும், எதிராக 29 வாக்குகளும் பதிவாகின. முன்னதாக, இது தொடர்பான விவாதத்தின்போது உக்ரைனுக்கு மேலும் நிதியுதவி வழங்குவதற்கு சில குடியரசுக் கட்சி எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அமெரிக்காவுக்கே ஏராளமான நிதி நெருக்கடிகள் இருப்பதால் வெளிநாடுகளுக்கு நிதி வழங்கத் தேவையில்லை என அவர்கள் கூறினர். ஆனால், உக்ரைனைக் கைவிட்டால் அது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு மேலும் துணிச்சலை ஏற்படுத்தும் என்றும், இது உலகம் முழுவதும் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை உருவாக்கும் எனவும் ஒரு தரப்பு எம்.பி.க்கள் வாதிட்டனர்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்தது. இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஆயுதங்கள் உள்ளிட்ட உதவிகளை அளித்தன.

எனினும், அமெரிக்க எம்.பி.க்களில் ஒரு பிரிவினரின் எதிர்ப்பு காரணமாக அந்த நாடு உக்ரைனுக்கு மேற்கொண்டு உதவிகள் அளிப்பதில் பின்னடைவு ஏற்பட்டு வந்தது. இது, உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தும் என்று அஞ்சப்பட்டது. இந்த நிலையில், அமெரிக்க நாடாளுமன்றம் தற்போது நிறைவேற்றியுள்ள மசோதா உக்ரைனுக்கு ஆறுதலை அளிக்கும் என்று கூறப்படுகிறது. (04)

# ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் கைது!

இஸ்ரேல் - ஹமாஸ் தரப்புகளுக்கு இடையேயான போர் தொடர்ந்துகொண்டிருப்பதால் காஸாவில் அமைதி என்பதே இல்லாமல் போயுள்ளது. தொடர் தாக்குதல்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்து வருகின்றனர் என்று பொது அமைப்புகள் தகவல் வெளியிட்டு வருகின்றன.

சர்வதேச அமைப்புகள் யாவும் போரை நிறுத்துமாறும், காஸா மக்களுக்குத் தேவையான மனிதநேய உதவிகளை அனுப்புமாறும் வற்புறுத்திவருகின்றன. ஆனால், இஸ்ரேல் யாருக்கும் இசையாது, ஹமாஸை அழிக்கும்வரை போரில் பின் வாங்கப்போவதில்லை, எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

தாக்குதல்களைத் தொடர்ந்துவரும் இஸ்ரேல் ராணுவம், ஹமாஸ் அமைப்பின் முக்கியமான தலைவர் ஒமர் அல்-ஃபயேத் என்பவரைக் கைது செய்திருப்பதாக தனது எக்ஸ் தளப்பக்கத்தில் தெரிவித்துள்ளது.

மேற்குக் கடற்கரைப் பகுதியில் காவல்துறை மற்றும் இஸ்ரேலின் பாதுகாப்புப்படை இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கையின்போது அடையாளம் தெரியாத நபர் நடத்திய தாக்குதலில் இரண்டு இஸ்ரேல் வீரர்கள் காயமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)



# ரஷ்யாவின் படைக்கப்பல் மூழ்கடிப்பு உக்ரைன் இராணுவம் அறிவித்தது

ரஷ்யாவுக்குச் சொந்தமான படைக் கப்பலை கருங்கடல் பகுதியில் தாக்கி மூழ்கடித்துள்ளதாக உக்ரைன் கூறியுள்ளது.

இது குறித்து அந்த நாட்டு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

வீரர்களையும் ஆயுதத் தளவாடங்களையும் எதிரி நாடுகளுக்கு ஏற்றிச் செல்லும் ரஷ்யாவின் படைக் கப்பலான சீசர் குனிகோவ், ஆளில்லா படகு (கடல் ட்ரோன்) மூலம் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது.

உக்ரைன் ராணுவ உளவுப் பிரிவான ஜியுஆரின் சிறப்புப் படைப் பிரிவு, மகுரா வி-5 ரக கடல் ட்ரோன் மூலம் இந்தத் தாக்குதலை நடத்தியது.

ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கிரீமியா தீபகற்பத்தின் அலுப்கா நகருக்கு அருகே சீசர் குன்னிகோவ் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது, என்று அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.


இது குறித்து ரஷ்ய ராணுவம் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. எனினும், கருங்கடல் பகுதியில் 6 உக்ரைன் ட்ரோன்களை இடைமறித்து அழித்ததாக மட்டும் அந்த நாட்டு ராணுவம் தெரிவித்தது. கருங்கடலில் ரஷ்ய படைக் கப்பலை மூழ்கடித்ததாக உக்ரைன் கூறுவது கடந்த 2 வாரங்களில் இது இரண்டாவது முறையாகும்.

ஏற்கெனவே, ஏவுகணைகளை ஏந்திச் செல்லும் ரஷ்யாவின் தாக்குதல் கப்பல் ஒன்றைத் தாக்கி மூழ்கடித்ததாக உக்ரைனின் ஜியுஆர் கடந்த வாரம் விடியோ ஒன்றை வெளியிட்டது.

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா 2 ஆண்டுகளுக்கு முன்னர் படையெடுத்தது. ஏற்கெனவே, உக்ரைனின் கிரீமியா தீபகற்பத்தை ரஷ்யா கடந்த 2014 ஆம் ஆண்டு கைப்பற்றியிருந்த நிலையில், இந்தப் படையெடுப்புக்குப் பிறகு கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் 4 பிரதேசங்களின் கணிசமான பகுதிகளும் ரஷ்யா வசம் வீழ்ந்தன.

இந்தச் சூழலில், கிரீமியாவிலும் அந்தத் தீபகற்பத்தையொட்டி கருங்கடல் பகுதியிலும் ரஷ்ய நிலைகள் மீது உக்ரைன் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றது. (04)

# அமெரிக்காவில் விளையாட்டு நிகழ்வில் துப்பாக்கிச்சூடு - ஒருவர் பலி- பலர் காயம்!






அமெரிக்கா சூப்பர் பௌல் விளையாட்டின் வெற்றி பேரணியின்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியாகியுள்ளார்.

அமெரிக்காவின் மிசோரி மாகாணம் கன்ஸாஸ் நகரில் உள்ளூர் சூப்பர் பௌல் போட்டியில் வெற்றி பெற்ற அணியினர் நேற்றுப் புதன்கிழமை ஆயிரக்கணக்கான ரசிகர்களுக்கு மத்தியில் பேரணியாகச் சென்று கொண்டிருந்தனர்.

இந்தப் பேரணியின் முடிவில் ரசிகர்கள் மத்தியில் வீரர்கள் உரையாற்றிய சிறிது நேரத்தில் கலவரம் ஏற்பட்டுள்ளது. இந்தக் கலவரத்தின்போது அடையாளம் தெரியாத நபர்கள் ரசிகர்கள் மீது திடீரென்று துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். இதில், ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 9 குழந்தைகள் உட்பட 20 க்கு மேற்பட்டோர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர், என்று அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை காவல்துறையினர் கைது செய்து விசாரித்து வருவதாகக் கூறப்படுகிறது. (04)

# பிரிட்டன் பல்கலை நியமனத்தில் இனப் பாகுபாடு 4.5 லட்சம் பவுண்ட்ஸ் இழப்பீடு வழங்குமாறு தீர்ப்பு

பிரிட்டனில் இனப் பாகுபாடுக்குள்ளான இந்திய பெண் விரிவுரையாளருக்கு 4.5 லட்சம் பவுண்ட்ஸ் இழப்பீடு வழங்க போர்ட்ஸ்மௌத் பல்கலைக்கழகத்துக்கு அந்நாட்டில் உள்ள பணியிட குறைதீர்ப்பு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

பிரிட்டனில் உள்ள போர்ட்ஸ்மௌத் பல்கலைக் கழகத்தில், இந்தியாவைச் சேர்ந்த காஜல் சர்மா என்பவர் ஒப்பந்த அடிப்படையில் 5 ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றினார். அவரின் ஒப்பந்த காலம் நிறைவடைந்த நிலையில், அந்தப் பணிக்கு அவர் மீண்டும் விண்ணப்பித்தார். எனினும் அவர் விரிவுரையாளர் பணிக்கு மீண்டும் தேர்வு செய்யப்படவில்லை.

அதேவேளையில், அவருடன் பணியாற்றிய வெள்ளையினத்தைச் சேர்ந்தவர்கள் மீண்டும் பணியமர்த்தப்பட்டனர். காஜல் சர்மாவின் பணியிடத்தில் எந்த அனுபவமும் இல்லாத வெள்ளையினத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டார்.

இதன் மூலம் இன அடிப்படையில் தனக்கு எதிராக பாகுபாடு காட்டப்பட்டதாக பல்கலைக்கழகம் மீது அந்நாட்டின் சௌதாம்ப்டன் நகர பணியிட குறைதீர்ப்பு தீர்ப்பாயத்தில் காஜல் சர்மா முறையிட்டார்.

இந்த வழக்கை விசாரித்த தீர்ப்பாயம், அந்தப் பல்கலைக்கழகப் பணிக்கு மீண்டும் விண்ணப்பித்த கறுப்பினத்தவர்கள், சிறுபான்மையின அலுவலர்கள் மறுநியமனம் செய்யப்படவில்லை என்பது வழக்கின் மூலம் தெரிவதாகக் குறிப்பிட்டது. அதேவேளையில், வெள்ளையினத்தவர்கள் 12 பேரில் 11 பேர் மறுநியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் தீர்ப்பாயம் தெரிவித்தது.

இதன் மூலம், பல்கலைக்கழகத்தில் காஜல் சர்மாவுக்கு எதிராக இனப் பாகுபாடு காட்டப்பட்டதை உறுதி செய்த தீர்ப்பாயம், அவருக்கு 4.5 லட்சம் பவுண்ட்ஸ் இழப்பீடு வழங்க போர்ட்ஸ்மௌத் பல்கலைக்கழகத்துக்கு உத்தரவிட்டுள்ளது. (04)

# உதைபந்தாட்ட தொடருக்கு அபுதாபிக்கு பயணமாகும் வடபகுதி மாணவர்கள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ரெனோன் உதைபந்தாட்ட அக்கடமி நடத்தும் 12 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் பங்கேற்கும் உதை பந்தாட்ட தொடரில் வட மாகாணத்திலுள்ள பாடசாலை களிலிருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள னர்.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த றிஸ்பன், யாழ் சென் பற்றிக் கல்லூரியைச் சேர்ந்த சபிந்தன், கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த தனுஷ், மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலயத் தைச் சேர்ந்த ஹனீஸ் ஆகிய மாணவர்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அபுதாபியில் இம்மாதம் இந்த உதை பந்தாட்டப் போட்டித் தொடர் நடைபெறவுள்ளது.

இம்மாணவர்களுக்கான பயிற்சிகளை பயிற்சி விப்பாளர் எம்.டனிஸ்ரன் வழங்கியிருந்தார்.



# தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய தமிழ்க் கலாசார பயிற்சி நிகழ்வு

தொல்லியல் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் பாரம்பரிய தமிழ்க் கலாசாரம் தொடர்பான விரிவுரை மற்றும் பயிற்சிப் பட்டறை நிகழ்வு ஒன்று யாழ்ப்பாணத் தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கோட்டையில் நேற்று புதன்கிழமை (14) தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர் பா.கபி லன் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. இதில் வளவாளராக கலாசார திணைக்கள உத்தியோ கத்தர் மார்க்கண்டு அருட்செல்வன் பங்குபற்றினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் இதில் பங் கேற்றனர். (01)

# திருமலை சிறைச்சாலையில் நூலக நடமாடும் சேவை



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத் தினால் திருகோணமலை சிறைச்சாலை கைதிகளுக் கான நூலக நடமாடும் சேவையும் சிறைச்சாலை நூலகத்திற்கு ஒரு தொகுதி புத்தகங்கள் கையளிக் கும் நிகழ்வும் நேற்று புதன்கிழமை (14) காலை திருகோணமலை சிறைச்சாலையில் இடம் பெற்றது.

நிகழ்வில் நடமாடும் நூலக சேவை பற்றியும் நூ ல கம் பற்றியும் சிறைக்கைதிகளுடன் கலந்துரையாட லும் இடம் பெற்றது.

ஒரு தொகுதி நூல்களை சிறைச்சாலை நூலகத் திற்கு திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ.இராஜசேகர், திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் பிறேமவன்சவிடம் கையளித்தார்.

நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் நா.பர மேஸ்வரன், திருகோணமலை சிறைச்சாலை பிர தான ஜெயிலர் இ.மோகனராசா, திருகோணமலை பொது நூலகத்தின் பிரதம நூலகர் ந.யோகேஸ்வரன், நூலகர் மு .லெ.றிம்சானா, நூலக உதவியாளர்கள் உ.ரஜனிகாந்தன், அ.அச்சுதன், நூலக உழியர் சி.கமலேஸ்வரி, சிறைச்சாலை நலன்புரி உத்தியோ கத்தர்களான முபாறக், சாந்த ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பட்டிருப்பு கல்வி வலயத்தில் கற்றல் உபகரணம் வழங்கல்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரின் ஒழுங்குபடுத்தலில் களுதாவளை சமுக பொருளாதார அபிவித்திச்சங்கம் (சீடா), கட்டாரில் தொழில் புரியும் உறவுகளின் பிரதான அனுசரணையில் வருடாவருடம் பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களை அந்நிலையிலிருந்து மீட்டு இடைவில கலைத் தவிர்த்து தொடர் கல்வியை பெறுவதற்காக கற்றல் உபகரணங்களை வழங்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்த நிகழ்வின் முதல் கட்டம் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தே.பா) களுவாஞ்சிகுடியில், முறைசாராக்கல்வி இணைப்பாளர் திருமதி.றீற்றா கலைச் செல்வனின் ஏற்பாட்டில், பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திரு .சிவானந்தம் சிறீதரன் தலைமையில் இன்று நடைபெற்றது.

இதில் பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.ஜ/வானந்தராசா, சீடா அமைப்பின் தலைவர் க.கிசோபன், சீடா அமைப்பின் உறுப்பினர்கள், பட்டிருப்பு கல்வி வலயத்தின் மண்முனை தென் எருவில் பற்று கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், முறைசாராக் கல்வி உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# ‘கலா பொல’ ஓவியக் கண்காட்சி பெப்ரவரி 18 இல் – கொழும்பில்!



இலங்கைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட வருடாந்த திறந்த ‘கலா பொல’ ஓவியக் கண்காட்சி தனது 31 ஆவது ஆண்டு நிறைவில், பெப்ரவரி 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

உலகின் மிகவும் பிரசித்தி வாய்ந்த ஓவிய கண்காட்சிகளான பெரிஸின் மொன்மேட்றி மற்றும் ஒக்ஸ்ஃபோர்ட் வீதியோர ஓவியக் கண்காட்சிகள் ஆகியனவற்றை அடியொற்றியதாக ஆரம்பிக்கப்பட்ட மேற்படி ‘கலா பொல’, தற்போது நாட்டின் கலை மற்றும் கலாசார நிகழ்ச்சிகளில் மிகவும் பிரபலமான மற்றும் முதன்மை மிக்கதாக அமைந்துள்ளது.

ஜோர்ஜ் கீட் அறக்கட்டளையின் கருத்தாக்கத்திற்கு அமைய 1993 இல் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி திட்டம், காலப்போக்கில் விரிவாக்கம் பெற்றுள்ளமையினால், அதிகமான கலைஞர்கள் தமது ஓவியப் படைப்புகளை விற்பனை செய்வதற்கும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்களை ஈர்ப்பதற்கும் வாய்ப்புகளை வழங்குவதாக அமைந்துள்ளதோடு, கலைஞர்களுக்கு அதிக வருமானத்தை ஈட்டுவதற்கான சிறந்தவொரு வாய்ப்பினையும் இது ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெப-31)

# முட்டை விலை 63 ரூபாவாக அதிகரிக்கப்படும் முட்டை வர்த்தக சங்கச் செயலாளர் தெரிவிப்பு

## உற்பத்தியாளர் சங்கம் முடியாதென மறுப்பு!

விநியோகம் மற்றும் இதர செலவுகள் அதிகரிப்பு காரணமாக முட்டை ஒன்றின் சில்லறை விலை 63 ரூபாவாக அதிகரிக்கப்படும் எனவும், முட்டை ஒன்றின் மொத்த விற்பனை விலையை ரூபாய் 58 அல்லது 59 ஆக அதிகரிக்க வேண்டும் எனவும் அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் செயலாளர் புத்திக வீரசேன தெரிவித்துள்ளார்.

எரிபொருளின் விலை அதிகரிப்பு மட்டுமன்றி, லொறி டயர்களின் விலை கூட மூன்று மடங்குக்கு மேல் அதிகரித்ததன் காரணமாகவே முட்டையின் விலை உயர்வடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முட்டை வியாபாரம் செய்யும் லொறி உரிமையாளர்கள் முட்டை உற்பத்தியாளர்களின் பண்ணைகளில் இருந்து முட்டைகளை கொள்வனவு செய்து நகரத்திலுள்ள முட்டை விற்பனை சந்தையில் வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதால் லொறி உரிமையாளர் மூன்று ரூபாய் லாபம் ஈட்டுவதாகவும், அந்த முட்டையை ஒரு ரூபாய் லாபம் வைத்து சில்லறை வியாபாரி வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கம் முட்டை ஒன்றின் அதிகபட்ச மொத்த விற்பனை விலையாக 50-51 ரூபாவாகக் குறிப்பிட்டுள்ள போதிலும், லொறி உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் மொத்த விலை அதனை விட மூன்று ரூபா அதிகம் எனவும் புத்திக வீரசேன தெரிவித்துள்ளார்.

உடைந்த முட்டை, அழுகிய முட்டை போன்ற தூக்கி எறிய வேண்டிய முட்டைகளை சில்லறை வியாபாரி லொறி உரிமையாளர்களிடமே மீள ஒப்படைப்பதால், அந்த நஷ்டத்தையும் லொறி உரிமையாளர்களே ஏற்க வேண்டியுள்ளது எனவும், அத்துடன் தாம் வேண்டுமென்றே திட்டமிட்டு முட்டை விலையை அதிகரித்திருப்பதாக சிலர் பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் புத்திக வீரசேன மேலும் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் ரத்னசிறி அழககோன், நுகர்வோர் அதிகாரசபை அல்லது வர்த்தக அமைச்சின் அனுமதியின்றி முட்டையின் விலையை நிர்ணயிக்கும் தார்மீக உரிமை முட்டை வர்த்தக சங்கத்திற்கு இல்லை!, என குறிப்பிட்டுள்ளதுடன், இந்திய முட்டைகளை மீண்டும் இறக்குமதி செய்யச் செய்யும் முயற்சியாகவே இவர்களின் இந்தச் செயல் எப்போதும் அமைந்துள்ளது, எனவும் குற்றஞ்சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெப-32)






## கல்விப் பணியாற்றியவர்களுக்கு அட்டாளைச்சேனையில் கௌரவம்

(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்துள்ள கல்வி விருது விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு லொய்ட்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் புதிதாக அதிபர்களாக நியமிக்கப்பட்டவர்களை பாராட்டி கௌரவிப்பதோடு கடந்த காலங்களில் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர்களும் இவ்விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பின் தலைவர் எம்.ஜே.எம். அன்வர் நௌஷாத் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரிஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம் எஸ் உதுமாலெப்பை, கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ் எம் சபீஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ கே அமீர், ஏசி.என்.நிறுவனத்தின் பணிப்பாளர் ஏசி நியாஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாவட்டக் குழுச் செயலாளர் ஏ.சி. சமால்தீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் எஸ்.எல்.ஏ.ஹலீம், முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனை அமைப்பாளர் ஏ.எல்.அலியார், முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் ஏ.எஸ்.எம். உவைஸ் உட்பட பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.



## தவளையுடன் குளிர்களி சந்நிதியில் சம்பவம்!

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு பகுதியில் உள்ள விற்பனை நிலையத்தில் தவளையுடன் குளிர்களி வழங்கப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சூழலில் உள்ள குளிர்பான விற்பனை நிலையமொன்றிலே நேற்று (14) குளிர்களி அருந்தச் சென்றவருக்கே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குளிர்பான விற்பனை நிலையத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.02.2024 இல் வெளியிடப்பெற்றது.